Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 174
சனிக்கிழமை
18 மே 2024

## முச்சந்தி முரளி



"முள்ளிவாய்க்கால் பாவம் கோத்தாவை அவ்வளவு லேசில விட்டுப் போகாது கண்டியளோ"



# தேசியத் தலைவருக்கு இன்று வீரவணக்க நிகழ்வு

## சகோதரர் வேலுப்பிள்ளை மனோகரன் அறிவிப்பு

கொழும்பு, மே 18
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு இன்று டென்மார்க்கில் வீரவணக்க நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளதாக வே.பிரபாகரன் அவர்களது மூத்த சகோதரனான வேலுப்பிள்ளை மனோகரன் அறிவித்துள்ளார்.
தமிழீழ விடுதலைப்

11

# இன அழிப்பின் நினைவழியாத நாள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இன்று

## அஞ்சலிக்கத் தயாராகிறது தாயகம்

யாழ்ப்பாணம், மே 18
2009 மே 18 இல் முள்ளிவாய்க்காலில் கட்டவிழ்ந்த இன அழிப்புப் பெருந் துயரை நினைவுகூர்ந்து அந்தக் குறுகிய வன்முறை வெளிக்குள் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் முள்ளிவாய்க்கால் மண்ணில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

10




யாழ்ப்பாணம், மே 18
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனின் ஏற்பாட்டில் வேலணையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகமும் வேலணை - வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள பொது நினைவுத் தூபியின் முன்றிலில் நேற்றுமாலை இடம்பெற்றது.

10

## நல்லூரில் இன்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இறுதி நாளான இன்று முள்ளிவாய்க்கால் மண்ணில் காலையில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ள நிலையில், மாலையில் பல்வேறு இடங்களிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

10

## மாலையில் இடி, மின்னல்!

யாழ்ப்பாணம், மே 18
இலங்கைக்கு மேலாகவும் இலங்கையைச் சூழ உள்ள கடற்பரப்புகளில் காணப்படும் பருவப் பெயர்ச்சி ஆரம்பிப்பதற்கு முந்திய காலநிலை மாற்றம் காரணமாக நாட்டில் மாலை நேரங்களில் இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி அதிகம் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்

10

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 18
மாங்காய் பிடுங்குவதற்காக ஏறிய இளைஞர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.
உடுவிலைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான சசிகுமார் ருபின்சன் (வயது - 20) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

11

# தமிழ்த் தேசியத் திரட்சியைப் பாதுகாக்க தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரியுங்கள்

## சிவில் சமூகங்களின் கூட்டிணைவு அழைப்பு

யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்காலில் உணர்வுபூர்வமாகத் திரளும் தமிழர்கள் அல்லது முள்ளிவாய்க்காலை நோக்கி உணர்வுபூர்வமாக பிணைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள், அதேபோல வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை

11

## முள்ளிவாய்க்கால் கஞ்சி: கைதானோருக்குப் பிணை

திருகோணமலை, மே 18
முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியமைக்காக சம்பூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 4 பேரும் நீதிமன்றத்தால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

10

# காணாமல் ஆக்கப்படல் மீளவும் நிகழும் ஆபத்து!!!

## பாதுகாப்புப் படைகள் மற்றும் ஒட்டுக்குழுக்களின் தொடர்புகளை ஏற்று அரசு மன்னிப்புக் கோரவேண்டும்

### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அறிக்கை

ஜெனிவா, மே 18
இலங்கையில் காணாமல் ஆக்கப்படல் மீளவும் நிகழ்வதற்கான உறுதியான ஆபத்து காணப்படுவதாகத் தெரிவித்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அளவையும் மற்றும் காணாமலாக்கப்படலில் பாதுகாப்பு படையின

11

## தமிழர்கள் கொலை: கோத்தாவுக்கு அழைப்பாணை

கொழும்பு, மே 18
2000ஆம் ஆண்டு மிருசுவிலில் இடம்பெயர்ந்த 5 வயதுக் குழந்தை உட்பட 8 பேர் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்ட கொடூர குற்றத்துக்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் சாவுத்தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கவை பொது மன்னிப்பில்

10

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்குத் தடை ஓரவஞ்சனையானது!

## பழ.நெடுமாறன் கண்டனம்



**புதுடில்லி, மே 18**

**தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளமையானது ஓரவஞ்சனையானது என்று உலகத்தமிழர் பேரவையின் தலைவரான பழ.நெடுமாறன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடிப்பதாக இந்திய அரசின் உள்துறை அறிவித்துள்ளது.

'2009ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற போர் முடிவுக்கு வந்த பிறகும், விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடவில்லை. அதற்கான ஆதரவு மற்றும் நிதித் திரட்டல் வேலைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. விடுதலைப்புலிகளின் இயக்கம் தமிழ்நாட்டில் இரகசியமாகச் செயற்படுகிறது. அனைத்துத் தமிழர்களுக்குமான தனி நாடு என்ற கோரிக்கையில் இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டையும் சேர்த்துள்ளது. இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு புலிகளின் நோக்கம் எதிரானது மட்டுமல்ல, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது' என்று தெரிவித்தே இந்தத் தடையுத்தரவை இந்திய அரசாங்கம் பிறப்பித்துள்ளது. ஒரே பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் அதை மெய்யாக்கிவிடும் முயற்சியில் கடந்தகாலங்களில் பதவியிலிருந்த இந்திய அரசுகளும், இப்போது பதவியில் இருக்கும் இந்திய அரசும் செயற்பட்டு வருகின்றன.

இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு - கிழக்குப் பகுதி மட்டுமே அடங்கிய தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அறவழிப் போராட்டங்கள் நடத்திய அரசியல் கட்சிகளும், ஆயுதப் போராட்டம் நடத்திய போராளிகள் அமைப்புகளும் முன்வைத்தனவே தவிர, ஒருபோதும் இந்தியாவில் உள்ள எந்தப் பகுதியின் மீது அவர்கள் உரிமை கொண்டாடவில்லை என்பது உலகறிந்த உண்மையாகும்.

இந்தியாவின் பகை நாடுகளுடன் எந்த வகையான உறவையும் விடுதலைப்புலிகள் வைத்துக்கொள்ளவில்லை. ஆனால், சிங்கள அரசு இந்தியாவின் பகை நாடுகளுடன் நெருங்கி உறவாடி, அந்த நாடுகள் இலங்கையில் இந்தியாவுக்கு எதிரான தளங்களை அமைப்பதற்குத் துணையாக நிற்கிறது என்ற உண்மையைக்கூட இந்திய அரசு எண்ணிப்பார்க்கவில்லை - என்றுள்ளது. (ம)

# புலிகளுக்குத் தடை அநீதியின் வடிவம்

## வைகோ கண்டனம்

கொழும்பு, மே 18

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு இந்திய மத்திய அரசு தடைசெய்துள்ளமை அநீதியான செயல் என்று இந்திய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், இந்தியாவின் இறையாண்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு புலிகள் இயக்கம் எதிரானது, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது என்ற அபாண்டமான பொய்க் குற்றச்சாட்டுகளை புலிகள் அமைப்பின் மீது சுமத்தியுள்ளது மத்திய அரசு.

இலங்கைத் தீவில் தமிழின மக்கள் அந்நாட்டு அரசால் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களின் சொத்துகள், உடைமைகள், நிலங்கள் ஆகியன இராணுவத்தினரால் கபளீகரம் செய்யப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்கள் குரல் எழுப்பியபோது, அவர்கள் கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கோ, இறையாண்மைக்கோ எதிராக விடுதலைப்புலிகள் ஒருபோதும் செயற்பட்டதில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தவறான நோக்கத்தோடு உண்மைக்கு மாறாக விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தடையை நீடிப்பது என்பது அநீதியான செயலாகும் - என்றுள்ளது. (ச-இ)

# உதயன் பணிமனையில் நேற்று குருதிக்கொடை உணர்வுபூர்வம்















முள்ளிவாய்க்காலில் கொன்றுகுவிக்கப்பட்ட உறவுகளின் நினைவாகவும் அவர்களை அஞ்சலிக்கும் வகையிலும், உதயன் பணிமனையின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றையதினம் பொதுமக்களின் பங்களிப்புடன் குருதிக்கொடை உணர்வெழுச்சியாக இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலை என்று அழைக்க வேண்டாமாம்

## கனடாவுக்கு இலங்கை அழுத்தம்

**கொழும்பு, மே 18**

**கனடாவில் இடம்பெறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களின்போது, இனப்படுகொலை என்ற சொல்லைப் பாவிக்கவேண்டாம் என்று இலங்கை அரசாங்கம் அழுத்தம் கொடுத்துள்ளது.**

2009ஆம் ஆண்டு இறுதிப் போரின்போது முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட தமிழர்களுக்கான நினைவஞ்சலி உலகம் முழுவதும் இடம்பெற்று வருவதுண்டு. எனினும் கனடாவில் அரசாங்கத்தின் தீவிர ஈடுபாட்டுடன் இந்த அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த நிலையிலேயே, இம்முறை மேற்கொள்ளப்படும் அஞ்சலி நிகழ்வுகளின்போது இனப்படுகொலை என்ற சொல்லைப் பாவிக்கவேண்டாம் என்றும் அதற்குப்பதிலாக 'இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள்' என்ற சொல்லைப் பாவிக்குமாறும் இலங்கை அரசாங்கம் தூதரக ரீதியில் அழுத்தங்களை வழங்கியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்ற தீர்மானம் கனேடிய நாடாளுமன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், போர்க் குற்றவாளிகளுக்கு கனடா பல்வேறு தடைகளையும் விதித்துள்ளது.

அத்துடன் பிரதமர் ட்ரூடோவும் இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலையே என்று திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே,

இலங்கை அரசாங்கம் தூதரக நகர்வுகளை மேற்கொண்டுள்ளது. (ம-6)

## முதியவர் உயிர்மாய்ப்பு

யாழ்ப்பாணம், மே 18

ஏழாலை கிழக்குப் பகுதியில் வசித்து வந்த முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தவறான முடிவெடுத்து கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளார்.

ஐயாத்துரை தியாகராஜா (வயது - 76) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவரதுபிள்ளைகள்அனைவரும் வெளிநாட்டில் வசித்து வருகின்ற நிலையில் குறித்த முதியவர் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ச-555)

## உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் நெடுந்தீவு பயணம்

உலக உணவுத் திட்டத்தின் கீழான செயற்றிட்டங்களைப் பார்வையிடுவதற்காக யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஜெரால்ட் ரெபெல்லி தலைமையிலான குழுவினர் நெடுந்தீவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பயணம் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை - உணவுத் திட்டத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்ட குளங்களை மேற்பார்வை செய்ததுடன் பயனாளிகளின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர்.

உலக உணவுச் செயற்றிட்டத்தின் முன்னேற்றங்கள், எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் மற்றும் மேலதிக செயற்பாட்டுக்காக புதிய இடங்களை இணைத்துக் கொள்வதன் சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டன. (ம-66)

## 'சுரக்ஷா' காப்புறுதி மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, மே 18

மாணவர்களுக்கான 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதியின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஆலோசகர் ஆஷ் மாரசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை செல்லும் மாணவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் காப்புறுதித் திட்டம் 2022ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டது. இந்தநிலையிலேயே தற்போது அந்தத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ச-இ)



## வேண்டாம் விஷப்பரீட்சை!

### சஜித்துக்கு ஹரின் அறிவுரை

கொழும்பு, மே 18

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் சஜித்தின் அரசியல் வாழ்வு முடிந்துவிடும். பிரதமர் வேட்பாளர் பதவியை ஏற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து செயற்படும் முடிவை அவர் தற்போது எடுக்கவேண்டும் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: சஜித் பிரேமதாஸவை பிரதமர் வேட்பாளர் பதவியை ஏற்று ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுமாறு நான் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன். ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் அவர் ஐந்து வருடங்கள் கற்றுக்கொண்டால் நிச்சயம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கமுடியும். அவ்வாறு இல்லாமல் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க முற்பட்டால் இறுதியில் தோல்வி ஏற்படும். இவ்வாறு இரு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்தால் அத்துடன் அவரின் அரசியல் வாழ்வும் முடிந்துவிடும். எனவே, சஜித்துக்கு மூளை இருந்தால் அவர் சாதகமான முடிவை எடுக்கவேண்டும் - என்றார். (எ-44)

## தினம் தெரியுமோ?

மலையகத்தில கனகாலமா ஆடப்படுற காமன் கூத்தில எரிஞ்ச கட்சி, எரியாத கட்சி எண்டு ரண்டு குரூப் வரும். சிவபெருமானுக்கு காதல் உணர்வு வரப்பண்ண காமன் மலரம்பு விடுவான். ஆனால் சிவனுக்கு கடும் கோபம் வந்திடும். அந்தாள் நெற்றிக்கண்ணைத் திறக்க காமன் எரிஞ்சு சாம்பலாப்போடுவான். இந்தக் கட்டம் காமன் கூத்தில வரேக்க, ஒரு குரூப் ' காமன் எரிஞ்சிட்டான்' எண்டும், இன்னொரு குரூப் ' காமன் எரியேலை' எண்டும்பாட்டுப்பாடி சண்டை பிடிப்பினம். அவையத்தான் எரிஞ்ச கட்சி, எரியாத கட்சி எண்டு சொல்லுறவை. 2009 ஆம் ஆண்டுக்குப் பிறகு, நாங்களும் இப்பிடி ரண்டு கட்சியாப் பிரிஞ்சு நிக்கிறம். ஒரு குரூப் 'தலைவர் இருக்கிறார்' எண்டுது, எதிர்க்கன்னையோ ' தலைவர் இல்லை' எண்டு சொல்லுது. இந்த ரண்டு குரூப்புக்களுக்கும் நடுவில மாட்டுப்பட்டு சனம் முழியா முழிக்குது.

முள்ளிவாய்க்காலில ஆமிக்காரர் தலைவர் எண்டு சொல்லி ஒரு உடம்பை காட்டினவை. ஆனால் அந்த உடம்பில கனக்கச் சந்தேகம் சனத்துக்கு. அவர் செத்து கனநேரத்துக்குப் பிறகுதான் உடம்பை எடுத்ததெண்டு ஆமி சொன்னது. அப்பிடி எண்டால் உடம்பு விறைச்சுப் போயிருக்கும். ஆனால் ஆமிக்காரர் காட்டின உடம்பில தலை ஒரு பக்கம் சரியுது. கைகால் அங்கையும், இஞ்சையும் எண்டு இழுபடுகுது. அதோட இவ்வளவு உயிர்போற சண்டைக்குள்ளையும் தலைவர் சேவ் எடுத்து, 'டை' அடிச்சு நிண்டவரோ எண்டும் சனத்துக்கு டவுட். அதைவிடப் பெரிய டவுட், அது உண்மையாவே தலைவரின்ர உடம்பெண்டால் ஆமிக்காரர் ஒரு மாதத்துக்கு அந்த உடம்பை இலங்கை முழுக்க ஊர்வலமாக் கொண்டுபோய் எழுப்பம் காட்டியிருப்பினம். சண்டையளில எடுக்கிற இயக்கக்காரரின்ர வித்துடல்களையே அப்பிடிக் கொண்டு போய் காட்டி பெருமைப்படுற ஆக்கள், தலைவரின்ர உடம்பு கிடைச்சா சும்மா இருப்பினமோ? ஆனால் உடனேயே அவை அதை எரிச்சுப் போட்டினமாம் எண்டு சொல்லுறதை ஆர்தான் நம்புவினம். அதைவிட, இன்னும் தலைவர் செத்திட்டார் எண்டு அரசாங்கம் மரணச் சான்றுதழும் குடுக்கேலை.

இந்த விசயங்களால சனம் 'தலைவர் உயிரோட எங்கையோ இருக்கிறார்' எண்டு நம்பிக்கொண்டிருக்கு. ஆனால் இந்த நம்பிக்கையை சிலர் தங்களுக்குச் சாதகமாகப் பாவிச்சு காசு, கார், வீடு, வளவு, சொத்து, சுகம் எண்டு வெளிநாடுகளில அனுபவிச்சுக் கொண்டிருக்கினம். அதே கோஷ்டிதான் தலைவரின்ர மகள் துவாரகா உயிரோட இருக்கிறா எண்டு ஆரையோ கொண்டந்து யூரிப்பில காட்டினவை. ஆனால் அது துவாரகா இல்லை எண்டு எல்லாருக்கும் பார்த்த உடனேயே விளங்கினதால,அந்தத் திட்டம் பெயிலியராப் போட்டுது. ஆனாலும் தலைவர் இருக்கிறார், கெதியில வருவார் எண்டு வெளிநாட்டுச் சனத்திட்ட சிலர் இன்னமும் தூண்டில் போட்டு லாபம் பாக்கினம்.

இதாலையோ என்னவோ, இந்தமுறை தலைவருக்கு வீரவணக்கம் செய்யப்போறம் எண்டு, தேசியத் தலைவரின்ர அண்ணை அறிவிச்சிருக்கிறார். அவருக்குக் கூட தன்ர தம்பி உயிரோட இருக்கிறாரா இல்லையா எண்டும் தெரியாமல் இருக்கலாம். ஆனால் தலைவரையும், அவற்றை குடும்பத்தையும் பாவிச்சு சிலர் செய்யிற உதவாத வேலையளைப் பார்த்து மனம் வெம்பித்தான் இப்பிடியொரு முடிவை அவர் எடுத் திருக்கிறார். கடவுள் இருக்கிறாரா இல்லையா எண்டு ஆராயிறதைவிடவும், கடவுளின்ர பேருக்கு களங்கம் வராமல் பாக்கிறதுதான் அந்தக் கடவுளுக்குச் செய்யிற கைமாறா இருக்கும். அதை எங்கட சனம் எப்ப செய்யும்?

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)



## மீனம்

நம்பிக்கையோடு முன்னேறினால் மலையும் மடுதான் என்று நினைப்பவர்கள் மீனராசிக்காரர்கள். இவர்களின் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் வெளியே சொல்லவேமாட்டார்கள். இறைநம்பிக்கை மிகுந்தவர்கள். அதேவேளையில் அடுத்தவர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கமாட்டார்கள். பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி வரையிலான நட்சத்திரங்களை உள்ளடக்கிய மீனராசிக்காரர்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களைக் கொடுக்கும் என்பதைப் பார்ப்போம்.

இதுவரை உங்களின் தன வீடான 2 ஆம் வீட்டில் அமர்ந்து ஓரளவு பணப்புழக்கத்தையும், கௌரவத்தையும், குடும்பத்தில் அமைதியையும் தந்த குருபகவான் இப்போது 01.05.2024 முதல் 14.05.2025 வரை மூன்றாவது வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கிறார்.

குடும்பத்தில் சலசலப்புகள் வந்து நீங்கும். உரசல் போக்கு வந்து நீங்கும். உங்களின் ஏழாவது வீட்டை குரு பார்ப்பதால் மறைந்திருந்த திறமைகள் வெளிப்படும். அன்பும், அந்நியோன்யமும் குறையாது.

**குருபகவானின் பார்வைப் பலன்கள்**

குருபகவான் உங்களின் ஒன்பதாவது வீட்டைப் பார்ப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். குரு 11வது வீட்டைப் பார்ப்பதால் காரியத்தடைகள் விலகும்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்**

01.05.2024 முதல் 12.06.2024 வரை சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் செலவுகளும், பயணங்களும் அதிகரிக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழந்து விடாதீர்கள்.

12.06.2024 முதல் 19.08.2024 வரை மற்றும் 02.12.2024 முதல் 05.04.2025 வரை சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் பிள்ளைப் பாக்கியம் கிடைக்கும். பூர்வீகச் சொத்து கைக்கு வரும். பிள்ளைகளால் அந்தஸ்து ஒருபடி உயரும். வேலை கிடைக்கும். 19.08.2024 முதல் 02.12. 2024 வரை மற்றும் 05.04.2025 முதல் 14.05.2025 வரை செவ்வாயின் மிருகசீரிட நட்சத்திரத்தில் குரு செல்வதால் தந்தை வழியில் நிம்மதியுண்டு. ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**உத்தியோகம் :** மேலதிகாரியுடன் வீண் விவாதங்கள் வரும். என்றாலும் உங்களை நம்பி முக்கியமான பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். ஆனால் சக ஊழியர்கள் உங்களை மட்டம்தட்டிப் பேசுவார்கள். அவர்களிடம் உஷாராக பழகுங்கள். கணினித் துறையினர்களுக்குப் புதிய சலுகைகள் கிடைக்கும். அடிக்கடி விடுப்பு எடுக்க வேண்டாம். கலைஞர்களே! பெரிய வாய்ப்புக்காகக் காத்திருக்காமல் கிடைக்கின்ற வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளப் பாருங்கள்.

**இந்தக் குரு மாற்றம் வேலைச்சுமை, அலைச்சல், சிறுசிறு ஏமாற்றங்களை தந்தாலும், உங்களை பதப்படுத்தி வெற்றி பெற வைக்கும்.**




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பவனி நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னாருக்குச் சென்றது. பெருமளவான மக்கள் அஞ்சலிப்பு நிகழ்வில் கலந்துகொண்டனர். (ப-213)



முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்டத்தில் சுண்டைக்குளம் இளைஞர் அணி மற்றும் ஓட்டோச் சங்கத்தினர் மற்றும் வர்த்தகசங்கத்தினர் இணைந்து, முள்ளிவாய்க்கால் அவலத்தை நினைவுகூரும் வகையில் நேற்று வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கினர். (ப-113)



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்து, முள்ளிவாய்க்கால் கஞ்சி நேற்று வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டது. (ப-[illegible])

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர் வருகையால் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு குறையும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. வீண் செலவுகள் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விற்பனையும் இலாபமும் குறைவாகத்தான் இருக்கும்.

**சிம்மம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்பட்டு திணற வைக்கும். காரியங்கள் முடிவதில் இழுபறி நிலை மாறும். பயணங்களை தவிர்க்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். இலாபமும் கூடுதலாகக் கிடைக்கும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். உடல் நலனில் கவனம் தேவை. செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படும். செலவு செய்ய நேரிடும். வீண் செலவுகள் ஏற்படும். மனஅமைதி பெறலாம்.

**துலாம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வீண் விவாதத்தில் ஈடுபடவேண்டாம். அனுசரித்துச் செல்வது நல்லது. இடையூறுகள் நீங்கும். வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். கருத்து வேறுபாடு நீங்கும். வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும். லாபமும் அதிகரிக்கும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. எதிர்பார்த்த பணஉதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனவருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமையாக நடந்துகொள்வது அவசியம்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சுபநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் கிடைக்க வாய்ப்புள்ளது. அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நடைப்பிணமாக உயிர்க்கூடுகள்!

இன்று மே 18. தமிழர் தேசத்தின் இதயத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட ஆத்மார்த்தமானதும் மிகக்கனதியானதுமான நாள்களில் முதன்மையானதும் தவிர்க்கமுடியாததுமான நாள். 15 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய நாளில்தான் முள்ளிவாய்க்கால் குருதிச் சகதிக்குள் சின்னாபின்னமானது. தன் சொந்த நாட்டு மக்களையே, சர்வதேச போர் நியமங்களை மீறியும், நியாயமான போரியல் நடவடிக்கைகளுக்குப் புறம்பாகவும் லட்சக்கணக்கில் கொன்றொழித்த உலகின் மோசமான இழிசெயல் நிகழ்ந்து இன்றுடன் ஆண்டுகள் 15.

எங்கள் உயிருக்கு நிகராக உறவுகளின் அன்றைய வாழ்வியல் ஒரு மண்வெட்டி, சில உரைப்பைகள், நான்கு தடிகள் அவ்வளவே. பச்சிளம் குழந்தை முதல், தலைமுறைகள் கண்ட பாட்டி, பூட்டன் வரை கொத்துக்கொத்தாகச் செத்துமடிய அவர்களுக்கான இறுதிச் சடங்குகளைக்கூட செய்யமுடியாத ஆற்றாமையுடன்தான் தமிழினம் அன்று தன் உயிரைக் கையில் பிடித்தபடி பயணப்பட்டுக் கொண்டிருந்தது. முள்ளிவாய்க்கால் இறுதிக் கணங்களில் தமிழினத்தின் பயணம் வெற்றியையோ அல்லது தோல்வியையோ நோக்கி அமையவில்லை. உயிர்ப் பிழைப்பை நோக்கிய பறவைக் கூட்டமாகவே எம்மவர்கள் நகர்ந்துகொண்டிருந்தனர். உயிர்வாழ்வதற்கான சிறு வாய்ப்பொன்று தமக்கு அமைந்து விடாதா என்பதுதான் அவர்களுக்கு அன்றிருந்த மொத்த அங்கலாய்ப்பும் ஏக்கமும்.

அந்த இனக்கூட்டம் உயிருடன் மீள்வதற்கான அத்தனை ஏதுநிலைகளும் சிங்களப் பேரினவாதத்தின் கொடும் கரங்களால் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டன. போரியல் முறைகளுக்குப் புறம்பாகவும், சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யுத்த நெறிமுறைகளுக்கு மாறாகவும் குருதியால் தோய்க்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்காலில் ஒரு சிறுதுண்டு நிலத்தில் பல்லாயிரம் தமிழர்களின் உயிர்கள் பகடையாக்கப்பட்டிருந் தன. காலை உரையாடியவன் மாலை பிணமாகிக் கிடந் தான். விருந்தோம்பலில் உலகுக்கு நெறிமுறை காட்டிய தமிழினம் மாங்காயையும் - தேங்காயையும் மூவேளை உணவாகக் கொண்டிருந்தது. பல நாள்களில் அதுவுமில்லை. உமிக்குள் அரிசி தேடிய அவலமும் அங்கேதான் நடந்தேறியது. இத்தனைக்கும் சர்வதேசமோ கைகட்டி 'வாய்மூடி' மௌனியாகவே இருந்தது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின் போதும், அதற்கு முன்னரும்கூட தமிழர்கள் மீது போர்க் குற்றங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இனப்படுகொலை இலங்கையில் இடம்பெற்றது என்பதை வெளிப்படையாக ஏற்றிருக்கின்றது ஐக்கிய நாடுகள்சபை. இதை ஒரு தீர்மானமாகவே நிறைவேற்றியிருக்கின்றது கனடா. ஆக, இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தன் பிடியை இறுக்கக்கூடிய அத்தனை ஏதுநிலைகளும் ஐக்கிய நாடுகள்சபையிடம் இருக்கவே செய்கின்றது. எனினும், தமிழர்கள் மீதான இந்தப் படுகொலைகளுக்கு என்ன நீதியை ஐ.நா. வழங்கிவிட்டது? ஒரு தசாப்தம் கடந்த பின்னரும்கூட நீதியை நிலைநாட்டி ஆறாத ரணத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு கொஞ்சமேனும் மருந்திடுவதற்கு என்ன பொறிமுறைகளை ஐ.நா. உருவாக்கியுள்ளது? இறுதிப்போரின்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடுவதைப் போன்று, இந்தக் கேள்விகளுக்கான பதில்களையும் தமிழினம் தேடித்தேடிக் களைத்துப்போய்விட்டது.

தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமானம் என்பர். சிங்கள பேரினவாதமும் - ஈழத் தமிழர்களும் இதற்கு ஆகப்பெரியதும் - ஆகச்சிறந்ததுமான எடுத்துக்காட்டு. ஆனால், தமிழர்கள் இறுதிப்போரின் போது தமக்கு இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு தக்க தண்டனையை உரிய தரப்பினர் அனுபவித்தே தீருவார்கள் என்ற அசையாத நம்பிக்கையை தமிழர்கள் அப்போதும் இப்போதும் ஆணித்தரமாகக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில், தமிழர்கள் இரண்டு விடயங்களில் தீரா நம்பிக்கை கொண்டவர்கள். ஒன்று இறை. மற்றொன்று வினை. அந்த இரு நம்பிக்கைகளும் இன்று வலுவாகவே எதிர்வினை ஆற்றிக்கொண்டிருக்கின்றன. எத்தனை தடைகள் வந்தாலும், கடைந்தெடுத்த இனவாதிகள் என்னதான் கொக்கரித்தாலும் எம் உயிருக்கு நிகரான உறவுகளை எம் உணர்வில்: உள்ளத்தில்: உயிரில் நிலைநிறுத்தி காலாகாலமாக அஞ்சலித்துக்கொண்டே இருப்போம். அது மட்டும் மாறாது!





# குற்றச்செயல் சொத்து அரசுடைமையாகும்

### வருகிறது சட்டம்

**கொழும்பு, மே 18**

**குற்றச்செயல்களினூடாக மோசடியான முறையில் சம்பாதித்த சொத்துகளை அரசுடைமையாக்கும் வகையில் புதிய சட்டம் விரைவில் கொண்டுவரப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

சட்டத்தின் ஆட்சி வீழ்ந்ததாலேயே நாடு உறுதியற்ற நிலைக்குச் சென்றது. நாட்டின் பொருளாதாரத்தை பலம்மிக்கதாக கட்டியெழுப்ப சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாத்தேஆகவேண்டும். குற்றச் செயல்களின் மூலம் பெறப்படும் சொத்துகளை அரசுடைமையாக்குவது தொடர்பான புதிய சட்டம் கொண்டுவர அமைச்சரவை அனுமதித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# சிறந்த சூழலின் பின்பே நாடாளுமன்றம் கலைப்பு

### சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, மே 18

கீழ்த்தரமான அரசியல் நோக்கங்களுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக வெளியாகியுள்ள செய்திகள் பொய்யானவை. நாட்டில் சிறந்த சூழல் உருவாக்கப்பட்ட பின்னர் உரிய நேரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை, ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படும் நாடு. பல சந்தர்ப்பங்களில் வன்முறைகள், கலவரங்கள் தோற்றம் பெற்றுள்ளன. ஜனநாயகத்துக்கு எதிரான அரசாங்கம் ஒருபோதும் தோற்றம் பெறவில்லை. ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்த பாதுகாப்புத் தரப்பினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. கீழ்த்தரமான அரசியல் நோக்கங்களை கொண்டுள்ளவர்கள் தான் இவ்வாறு வதந்திகளைப் பரப்பிக் கொள்கிறார்கள் - என்றார். (ச-இ)

# ரஷ்யாவுக்கு ஆட்கடத்தல்; இருவர் கைது

கொழும்பு, மே 18

ரஷ்ய இராணுவத்தில் வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி சட்டவிரோதமான முறையில் ரஷ்யாவுக்கு இலங்கையர்களை அனுப்பி வைத்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவர்களால் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# ஷெஹானுக்கு கொலைமிரட்டல்



நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கொல்லப்படவுள்ளார் என நிதி அமைச்சிலுள்ள அவரது அலுவலகத்துக்கு அநாமதேய அழைப்பொன்று வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அழைப்புடன் தொடர்புடைய சந்தேகநபரை அடையாளம் காணும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

**நாளை**

19.05.2024

**ஞாயிற்றுக்கிழமை**

**வைகாசி - 06**

சுபநேரம் : 08.52 - 10.22

ராகுகாலம் : 04.22 - 05.52

**நாளொரு நல்வார்த்தை**

**"நீ பொய் சொன்னதில்
எனக்கு வருத்தம் இல்லை
என்னால் உன்னை நம்பமுடியாது
என்றுதான் எனக்கு வருத்தம்."**

**-நீட்சே-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலவெளிச்சத்தை நோக்கிய உயிர்க்கூடுகளின் பயணம்!



எல்லாமே சட்டென்று முடிந்துவிட்டது. மண்பானையொன்று தளம்பிய நீரோடு தார் வீதியில் விழுந்துநொறுங்குவதைப் போல... விஜயதசமி அன்று சுவர்வாள் போன வேகத்தில் இரண்டாய்ச் சரிந்து விழும் வாழை போல... எல்லாமே சட்டென்று முடிந்து விட்டது. ஒரு தறப்பாள், நாலு தடிகள், மறக்காமல் எடுத்து வைத்த மண்வெட்டி, உரப்பை, பழைய சேலைகள் இவைதான் அன்றைய எங்களது வாழ்க்கை. எங்கே 50 கிராம் சீனி வாங்கலாம் என அறியக் கிடைக்கிறதோ அதுவே அன்றைய மிக நல்ல செய்தியும், சிறப்புச் செய்தியும் ஆகிவிடும். ஒரு தூக்குத் தண்டனைக் கைதியின் கழுத்து தூக்குக்குள் நுழைந்திருக்கும் தருணத்தைப் போலவே அத்தனை பேரது இதயங்களும் படபடப்பாக இருந்தன.

**பூமி பொறுமையானது கொடுமையானதும் கூட**

வரலாற்றில் முதன்முறையாகத் தாய் பிள்ளையிடம் தனக்குப் பசிக்கிறதெனச் சொன்ன பரிதாபம், ஆண் மகன் ஒப்பாரி வைத்தழுத அவலம். அந்தக் கடற்கரை மணல்வெளியில் நிகழ்ந்தேறியது. வெட்கமும் ஆற்றாமையும் குழைத்துப் பூசிய முகத்தைத் தாடியால் மறைத்துக் கொண்டு கஞ்சிக்காக வரிசையில் நின்ற சிதம்பரம் மாஸ்டரைப் பார்த்தபோது ஓவென்று கதறி அழுது விடவேண்டும் போலிருந்தும் அடக்கி வைத்த அழுகையை என்னால் அப்போது வெளிக்காட்டவே முடியவில்லை. கவனிக்காதது போல் அவரைக் கடந்து செல்லவே முடிந்தது. ஊருக்கே சோறுபோட முடிந்த அந்த இறுமாப்பில்லாத மனிதனை ஒரு வயிற்றுக் கஞ்சிக்காகக் காத்திருக்க வைத்த காலம் எத்தனை கொடுமையானது.

குழி விழுந்த சிரிப்பையும், சாப்பிட்டாச்சா? என்ற வார்த்தையையும் யாரைப் பார்த்தாலும் உவகையோடு தந்துவிட்டே அடுத்த வார்த்தை பேசும் அந்த வீரன் மண்ணப்பிய முகத்தோடு அரையுடலாய் கிடக்க வெறுமனே பார்த்துவிட்டுக் கடந்து வர மட்டும்தான் முடிந்தது. அவனுக்கான கண்ணீர் இன்னும் சிந்தப்படாமல் உயிர்க்கூட்டில் கிடந்து கொதித்துக் கொண்டு தானிருக்கிறது. இவற்றையெல்லாம் எங்கே இறக்கி வைப்பதெனத் தெரியாமல் காலம் இழுத்த திசைக்கெல்லாம் அலைகின்றன கால்கள். தெருவோரக் கதவையும் சாத்திவிட்டே வீட்டுக்குள் தனது உடைமாற்றும் நண்பனின் தங்கை அம்மணமாய்க் கருகிக்கிடக்க போர்த்திவிடக்கூட ஏதுமின்றி தலையை மட்டுமே திருப்ப முடிந்த அந்த கையாலாகாத்தனத்தின் நினைவுகளை மீட்க மீட்க மனம் வெதும்பிப் புரள்கின்றது. அவள் எறிந்து போன பெண்மை இன்றுவரையும் நண்பனைப் பைத்தியக்காரனாகவே வைத்திருக்கிறது.

**மறக்கமுடியாத சோகம்**

கையிலிருக்கும் ரொட்டித்துண்டை எட்டுவருடம் கழித்துப்பிறந்த தனது குழந்தைக்கு ஊட்டிக்கொண்டிருக்கும்போது ஷெல்பட்டுச் செத்துப்போன அந்த இருவரையும் கட்டிப்பிடித்து அழுதுகொண்டிருக்கும் கவி அண்ணாவின் கைகளைப்பிடித்து ஒற்றை வார்த்தை கூறமுடியாத அந்த நிமிடங்களை வெறும் சம்பவமாக எப்படி வரையறுக்கமுடியும். ஒவ்வொருநாளும் காலையில் தன்னுடைய சைக்கிளில் அத்தனைபேருக்கும் சாப்பாடு எடுத்துவரும் எழிலரசி அக்கா, பால் போத்தலோடு கடக்கும் போதெல்லாம் என்னைக் கண்டு பாலைவிட வெள்ளையாய் சிரித்து விட்டுப் போவாள். அன்று அவளை வெறும் சிவப்பாக வடலியில் தலை மட்டுமே காண்பேனென்று கனவிலேனும் நினைக்கவில்லை. பால்ச் சிரிப்பு பழுதின்றிக் கிடந்தாலும் வடலித் தலைதான் மனதை நிறைத்துப் பாரமாக்குகின்றது. அந்தப் பால்ச்சிரிப்பை பாழாக்கியது எந்த நாட்டு எறிகணையின் எச்சம். தேடிக்கொண்டிருக்கிறது காலம்.

கத்தரி இப்ப காய்ச்சிருக்கும். மிளாய் பூக்கத் தொடங்கியிருக்கும். கொஞ்சநாள் நிண்டிருக்க வெண்டிக்காயை வித்திருக்கலாம் என்று தனக்குள்ளே கதைத்துக்கொண்டு மல்லாவியில் விட்டுவந்த செடிகளுக்காய் மாத்தளனில் அழுதுகொண்டிருக்கும் அப்பாவுக்கு எந்த வார்த்தைகளால் ஆறுதல் சொல்லமுடியும். சற்று முன் சிரித்தவன் சல்லடையாகச் சரிந்ததும் குளித்துக் கொண்டிருந்தவள் கிணற்று வாளியை அணைத்தபடி குருதிகுளித்துக் கிடப்பதும் விநாடிகளில் நிகழ்ந்துபோனது. கண் முன்னே மூன்று பிள்ளைகளையும் தொலைத்து விட்டு விளையாத நிலம்போல இருக்க எந்தத்தாய்க்கு மனசு வரும் 'என்னையும் கொல்லடா என்னையும் கொல்லடா' என்று அவர் வானதிரக் கத்தியது இன்றும் என் இரவுத் தூக்கங்களைத் துவம்சம் செய்கிறது. 'த பியானிஸ்ற்' என்ற ஆங்கிலப்படத்தில் வருவதுபோன்று ஒரு துண்டு சர்க்கரையில் ஒன்பது தேநீர் குடித்த காலமது. ஒரு குழந்தை முதன்முதலாய் பிச்சையெடுக்கப் பழகியது. பசி என்றால் யாரிடமாவது இறைஞ்சலாம் என்ற வாழ்க்கைப் பாடத்தைத் தானாகவே கற்றுக்கொண்டது. காலம் அதற்குச் சரியாய் களமமைத்துக் கொடுத்தது. மழைபெய்து மணந்த மண்வாசனையில் என்ர வீட்டு முற்றம் மணக்குது என்று முழங்காவில் முற்றத்தை முள்ளிவாய்க்காலில் மோப்பம் பிடித்த அப்பாவின் உடலின் கொஞ்சச் சாம்பலைக் கூட ஊர்ச் சுடலையில் போடாத சாபம் எனக்குப் பின் வருகின்றதலைமுறைக்கும்நீண்டுகிடக்கிறது. 'இருந்த தேயிலையில் எங்களுக்குத் தேத்தண்ணி ஊத்தித் தந்துவிட்டுத் தாமும் குடிப்பதுபோல் வெறும் சுடுதண்ணியை அம்மாவும் அக்காவும் குடித்ததை அறிந்தவுடன் விஷமாகிய தேநீரை வெளியே துப்பமுடியாமல் முண்டி விழுங்க முடியாமல் என்னைப்போல் எத்தனை தம்பிகளும் மகன்களும் முயன்றிருப்பர்.

பள்ளிக்கூடச் சேட்டை உள்ளே விடவில்லை என்பதற்காய்க் கண்டித்த கலா ரீச்சர், 'தம்பி டேய் பனையடியில அங்கர் குடுக்கிறாங்களோ....?' என்று கேட்டபடி, வீட்டுக்குப் போட்ட சோட்டியோடு வீதியில் ஓடிப்போகும் அலங்கோலம் எப்படிச் சொல்ல. கடைக்குப்போக வெட்கப்படும் என் தெருத்தோழி சித்தாராவை அவளது பாவாடைக்குள் மாங்காய்களை ஏந்திவரும் நிலைக்கு மாற்றியது அவள் வயிற்றிலிருந்த பசி எனும் நெருப்பு. அன்று வெட்கப்படும் போதெல்லாம் என்னருமைத் தோழி நினைத்திருப்பாளா இப்படிக் காலம் தன்னைத் துகிலுரிக்குமென்று...? பதுங்கியிருந்த பங்கருக்குள்ளே அப்பன், மருமகள், மகன் என உயிர்க்கூடுகளை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி, மண்மூடிக் கடந்துவரும்போது அந்தக் கணத்திலும் அம்மா ஒரு தடவை நின்று நிதானமாக அந்த மண்மேட்டைப் பார்த்துக்கொண்டாளே. அந்த நேரம் என்னவென்று நினைத்திருப்பாள். அந்த வார்த்தைகளுக்கு உயிர் இருந்திருக்குமா? திறந்துவிட்டு வந்த கோழிகளுக்காகவும் ஆடுகள் மாடுகளுக்காகவும் வீதிவரை வந்து வந்து வழியனுப்பி மீண்டும் வீட்டை நோக்கி ஓடி முற்றத்தில் கிடந்து ஊளையிட்ட சடையன் நாய்க்காகவும் இன்று மேரிப் பெரியம்மா செபிக்கும் பொழுதுகளில் செபமாலைக் கொட்டைகளுக்குப் பதில் பாறாங்கற்கள் மனசுக்குள் உருண்டு கொண்டிருப்பதை யாரறிவார்? மடத்தடி வைரவருக்குப் பூப்பிடுங்க அதிகாலைக் கருக்கல்லுக்குள் தடுமாறும் அப்பம்மா, இந்தக் கடற்கரை மணல்வெளிக்குள் எந்தச் சாமிக்குப் பூப்பிடுங்கி என்ன பயன் என்பதாய்ப் படுக்கை பூண்டுவிட்ட நிலையை எப்படி உரைப்பேன்?, இப்படி இப்படியாய் ஒவ்வொரு கனமான ராத்திரிகளையும் கறுப்புப் பூசிக் கொண்ட பகல்களையும் வார்த்தைகளாலும் மௌனங்களாலும் நிரப்பிக்கொண்ட பசிப் பொழுதுகளையும் எப்படி நாம் நினைவழிப்பது. கடந்து வந்தவைகள் வெறும் கனவுகளா என்ன?

**கடைசி நேரப்பயணம்**

எங்கள் கடைசி நேரப் பயணங்கள் வெறும் ஒரு தோல்வியையோ ஒரு வெற்றியையோ நோக்கி நகர்ந்ததென்று எவராவது நம்பினால் அவர்கள் பரிதாபத்துக்குரியவர்களே. எங்கள் இறுதியாத்திரை சத்தத்தாலும் குருதியாலும் புறப்பட்டதென்று எவராவது புலம்பினால் அவர்கள் கவலைக்குரியவர்களே. எங்கள் பயணம் உயிர்ப் பிழைப்பை நோக்கிய பறவையின் பயணம். எங்கள் பயணம் ஒரு காலவெளிச்சத்தை நோக்கிய பயணம். குருத்திலிருந்து மரம் வரைக்கும் மணற் தரைக்குள் புதைத்து விட்டல்லவா இந்தப் பயணத்தைக் கடந்து முடித்திருக்கிறோம். பார்த்தவர்களுக்கும் தெரியாது. கேட்டவர்களுக்கும் தெரியாது. உணர்ந்தவர்களுக்குத் தான் தெரியும்.




அலைகள் விட்டுச்செல்லும் மணற்கரையில்
நுரைகளொடு கரைந்துபோகிறது
என் நிழல்,
கடலின் ஆழத்தில் புதைந்த சூரியனை
தேடி மறுபடியும் இசைக்கிறேன்.
வாரிச்செல்ல சருகுகளில்லாமல்
வெறுமையாய் கிடக்கும் காட்டில்
கோபத்தை விழுங்கி குமுறுகிறது காற்று
பனிபூக்கும் குளிர்காலமொன்றில்
உயர்ந்த மலைகளின் இடுக்குகளை
மோதி வருகிறது சூடான என் மூச்சுக்காற்று.

இருண்ட குகையின் ஆழத்தில்
ஒட்டியிருக்கும் மின்மினிப்பூச்சிகளின்
மெல்லிய சிறகசைப்பில்
ஊற்றெடுக்கிறது பூங்காற்று.
சூரைப்பற்றைகளின் நடுவில்
குரல்கேட்க முடியாத தொலைவில்,
நீயும் காதலை சுவாசித்தபடியிருப்பாய்
மழையின் சுவையை அருந்தியும்
கனவுகளின் சிறையில் சிக்காமல் ஓடுகிறது காலநதி
மறுபடியும் வேலியில்
மொட்டவிழ்க்கிறது செங்காந்தள்.

லக்ஷ்மன் குலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15. இராசாவின்தோட்டம் ஒழுங்கை. 5/8A எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் தம்பிராசா மாணிக்கத்தின் உரிமையாளர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

இவ்வாதனம் 1935ம் ஆண்டு தை மாதம் 09ம் திகதி யாழ் மாவட்ட நீதிமன்ற பிரிவிடுதல் வழக்கு இலக்கம் - P/936 இன் இறுதித் தீர்ப்பின்படி யோசேப் சுவக்கீன் கைம்பெண் பிலோமினாவுக்கு உரித்தாக வந்தடைந்தது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். இல - 5/8A, இராசாவின்தோட்டம் வீதியைச் சேர்ந்த யோசேப் சுவக்கீன் கைம்பெண் பிலோமினா 15.10.2018ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு J.S.A. மதுரநாயகம் முகதாவில் 4541ம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் இல-46/2. மாட்டின் வீதி. யாழ்ப்பாணத்தை சேர்ந்த சின்னத்தம்பி இராஜேந்திரனுக்கும் பெண் நளினிக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் இல-46/2, மாட்டின் வீதி. யாழ்ப்பாணத்தை சேர்ந்த சின்னத்தம்பி இராஜேந்திரனும் பெண் நளினியும் 23.01.2019ம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு J.S.A. மதுரநாயகம் முகதாவில் 4731ம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் இல-555/20. பருத்தித்துறை வீதி. நல்லூரைச் சேர்ந்த வீரகத்தி கோபாலசிங்கம் கைம்பெண் சுமதிக்கு வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி. சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி பறுகுகாடு இறை. பிரதேச செயலர் பிரிவு-யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் மாநகரசபை. கிராமசேவகர் பிரிவு J/78.
"பள்ளமடம்" யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற பிரிவிடுதல் வழக்கு இலக்கம் - P/936ல் அணைக்கப்பட்ட நிலஅளவையாளர் V.சன்முகலிங்கம் தயாரித்த 11.06.1934ம் திகதிய 2780ம் இலக்க நிலஅளவைப்படத்தில் " 1 " எனும் இலக்கத்தால் சுட்டிக்காட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு 1 (ஒன்று) குளி 11 2/5 (பதினொன்றுடன் ஐந்தில் இரண்டு)ம். வான்பயிர் செய்பயிர்களும்.. இதில் ஏற்கனவே கிழக்குப் பக்கமாக அறுதிவிற்ற பகுதி போக மிகுதி நிலப்பரப்பு 1 (ஒன்று)ம். அதற்குச் சேர்ந்தவைகளும். இது பின்னர் உத்தரவு பெற்ற நில அளவையாளர் K. ஆறுமுகம் அவர்களால் 01.10.2018ல் அளந்து தயாரித்த நில அளவைப் படத்தில் Lot 1. Lot 2 எனக்காட்டப்பட்ட துண்டுகளாகிய நிலப்பரப்பு 1 (ஒன்று)ம் அதற்குச்சேர்ந்தவைகளும்.

இந்த நிலப்பரப்பு 01 ற்கும் எல்லைகள் -
கிழக்கு :- மோசஸ் செல்வம் பற்றிமா கலாவதியின் ஆதனம்.
வடக்கு :- யேசுதாஸ் சீலனின் ஆதனம்.
தெற்கு :- திரேசா அகஸ்தினினதும். றிச்சேட் ஜெகநாதனினதும் ஆதனம்.
மேற்கு :- சண்முகத்தின் ஆதனம்.

தற்போது வீரகத்தி கோபாலசிங்கம் கைம்பெண் சுமதி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வீரகத்தி கோபாலசிங்கம் கைம்பெண் சுமதி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**யாழ் மாநகர சபை.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 14 . 02 . 1951



**மறைவு** 16 . 05 . 2024

# திலகவதி மகாலிங்கம்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் ஊரதீவைப் பிறப்பிடமாகவும் உக்கிளாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திலகவதி மகாலிங்கம் நேற்றுமுன்தினம் (16.05.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பூமணி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும். செல்லத்துரை மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும். மலர்விழி (லண்டன்). கருணாகரன் (லண்டன்). பவளவிழி (இலங்கை). கயல்விழி (நெதர்லாந்து). தயாகரன் (பிரான்ஸ்). தீபவிழி (இலங்கை). தீபகரன் (இத்தாலி). றஜீகரன் (பிரான்ஸ்). நிஜாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். பிரபாகரன் (இத்தாலி). ஸ்ரீசக்தி (லண்டன்). ஸ்ரீகரன் (இலங்கை). அன்புதாசன் (நெதர்லாந்து). ஜெயரஜனி (பிரான்ஸ்). சுகேஸ்கரன் (ஜேர்மனி). சாளினி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமியாரும். தங்கேஸ்வரன். காலஞ்சென்றவர்களான பத்மநாதன். சபாரட்ணம் மற்றும் லீலாவதி. புனிதவதி. குலசேகரம். கிருபானந்தன் (சுவிஸ்). சண்முகசுந்தரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். சத்தியபாமா. ஸ்ரீகந்தராசா. றஞ்சிதமலர். மகேஸ்வரி. சிறிதரன். யோகாம்பிகை. நவமணி. பத்மாவதி. தம்பிராசா. மகாலிங்கம். அருளரசி. மகாலட்சுமி. சாரதாமணி ஆகியோரின் மைத்துனியும். தர்சிகன். நிதுர்ஷன். நிதுஷா. ரணிஷா. அட்சயா. அபிநயா. அன்சிகா தன்சிகா. அபர்ணிகா. அட்சயன். கரிஸ். வர்ஷா. தமிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் உக்கிளாங்குளம் வவுனியாவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**294/4, பிள்ளையார் கோவில் வீதி,**
**உக்கிளாங்குளம்,**
**வவுனியா.**

தொடர்பு:
**076 991 4514**
**076 413 3721**
**075 412 2451**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/55095) (N-1)


## வேலையாட்கள் தேவை

**தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO)**
HND, NTC - Civil /Qs
NVQ Level 5 Experience with Preparing Bill.
தொடர்பு:- **077 210 0749**
Mail :- bestbuilders1983@hotmail.com
(காலை 8.00 - மாலை 5.00 வரை) யாழ்ப்பாணம்
(CS/55106) J-1


# அநுராதபுரத்திலிருந்து பெரமுனவின் பரப்புரை

கொழும்பு, மே 18
அநுராதபுரத்திலிருந்து இம்மாதம் 26 ஆம் திகதி தேர்தல் பரப்புரை நடவடிக் கைகளை ஆரம்பிக்க மொட்டுக்கட்சி தீர்மானித்துள்ளது. இந்த விடயத்தை கட் சியின் பிரதான அமைப்பாளரும் வடமத்திய மாகாண முன்னாள் முதல மைச்சருமான ரஞ் சித் சமரக்கோன் தெரிவித்துள்ளார்.
(ச-6)


## CLASSES

**Personal & Group Classes**

- **Biology : Tamil & English Medium**
- **Science : Tamil & English Medium**

**(Practical will be Conducted)**
**For Grade 6 to 11**
**English for Grade 6 to 11**
**By Teacher - S.Satkunes BSc/P.G.D in Education (INTERNAL)**
**Contact :- 077 078 4415**
(CS/55103) J-1

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுர அடி - 100 ரூபாய்
**077 334 1281**

## THE ROYAL COLLEGE OF JAFFNA

O/L, A/L மாணவர்களுக்கு
சிறுகுழுக்களாக மாலை நேர
வகுப்புகள் கற்பிப்பதற்கு
**தமிழ் பாட ஆசிரியர் தேவை.**
**குபேரன் கட்டட மாடி சங்கானை.**
தொடர்பு: **077 675 1649**
(CS 55098)

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs. 2500.00 - 3000.00 |
| மேசன் உதவியாளர் | - Rs. 2000.00 - 2500.00 |
| பெயின்ரர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| வெல்டர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs. 2500.00 - 3000.00 |

**(தேவைப்படின் தங்குமிடம். உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)**
(CS/55107) J-1
தொடர்பு:- **077 210 0749**
(காலை 7.00 - மாலை 6.00 வரை) யாழ்ப்பாணம்


# மரண அறிவித்தல்

**மண்ணில்** 29 . 11 . 1948



**விண்ணில்** 16 . 05 . 2024

## சோதிமலர் இராசரெத்தினம்

திருநெல்வேலி கிழக்கு பூதவராயர் வீதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் முத்திரைச் சந்தி. வவுனியா வைரவபுளியங்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட சோதிமலர் இராசரெத்தினம் நேற்றுமுன்தினம் (16.05.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தங்கம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரெத்தினம் (இராசையா மருந்துக்கடை) அவர்களின் அன்பு மனைவியும், ரஜிதா, விஜிதா, இராஜசெழியன் (இராசையா மருந்துக்கடை - உரிமையாளர்), ரஜினி, இராஜசேரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சித்தார்த்தர் (பிரணவன் என்ரபிறைசஸ் - உரிமையாளர்), பாஸ்கரன், மாலதி, தயானந்தன், ரீடா, காலஞ்சென்ற ஸ்ரீதரன், ஸ்ரீவதனி, மகிந்தன், முகுந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், செல்வநாயகி மற்றும் இராஜரட்ணம், காலஞ்சென்ற வைத்தியநாதன், நாகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜசிங்கம், குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இளங்கோ, இளஞ்ஜே, அனுசியா, குமரன், ரதிலக்ஷ்மி, கலைவாணி, கபிலன் ஆகியோரின் பெரியம்மாவும், இந்துருஜன், பிரவீணன், பிரணவன், அஸ்வியா, தர்மிகன், தனுராம், விகாஸ், அனிக்கா, ஆரணி, ஆரதிகா, ஆதித்தியன், திவ்வியங்கா, கவித்ரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் முத்திரைச் சந்தியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.633 பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(CS/55097) J-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயரளவிலான நல்லிணக்கத்தையும் பாதிக்கும் செயற்பாடுகளில் அரசு

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 18

வடக்கு - கிழக்கில் நினைவுகூரும் உரிமைகளைத் தடுக்கும் செயற்பாடுகள் பெயரளவிலாவது கூறப்படும் நல்லிணக் கத்தைப் பாதிக்கும். சிறிலங்கா அரசின் இதுபோன்ற செயல்கள் யாவும் சர்வதேச சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமவா யங்கள், பிரகடனங்களை மீறுவதோடு, சிறிலங்காவின் நீதிக்கட்டமைப்பு உள் ளிட்ட அனைத்துவித உள்ளகப் பொறி முறைகளும் நம்பகமற்றவை என்பத னைத் தொடர்ந்தும் நிரூபிக்கின்றன என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'முள்ளிவாய்க்கால் தமிழினப் படு கொலை' நினைவேந்தல்கள் வடக்கு-கிழக்கு தமிழர் தாயக நிலப் பரப்பெங்கும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப் பட்டு வரும் நிலையில் சிறிலங்கா பொலி ஸார், இராணுவம் உள்ளிட்ட படைத் தரப்புகளால் நினைவேந்தல் நிகழ்வுகள் தடுக்கப்பட்டு நினைவு கூரும் உரிமை கள் மறுக்கப்படும் வன்செயல்கள் அரங் கேறி வருகின்றமையை மாணவர் சமூக மாக கூர்ந்து நோக்குகின்றோம்.

திருகோணமலை சேனையூரில் முள்ளி வாய்க்கால் கஞ்சி யைப் பரிமாறி போரில் இனப்படு கொலைக்கு உள் ளானவர்களை நினைவு கூர்ந்த மக்கள் சிறிலங்காப் பொலிஸாரால் கைது செய்யப்பட் டமை மற்றும் மட்டக் களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கிய பொதுமக்கள் சிறிலங்காப் பொலிஸா ரால் அச்சுறுத்தப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் தடுக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியும் உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்களின் இருப்பென்பது ஆள்புல மற்றும் குடிசன ரீதியில் ஆக்கிரமிக்கப்பட்டு கேள்விக்குள் ளாக்கப்பட்டுள்ள நிலையில் நினை வேந்த லுடன் தொடர்புடைய நிகழ்வுகள் சிறிலங்கா படைத் தரப்புக்களால் கண் காணிப்புகள், அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதோடு, அவற்றைத் தடுக்கும் செயற்பாடுகளில் தீவிரத் தன் மையுடன் ஈடுபடுகின்றமையை அண் மைக்காலங்களில் நோக்கக் கூடியதாக வுள்ளது.

நினைவேந்தல் செயற்பாடுகளை முன் னெடுக்கும் பொதுமக்களை ஆங் காங்கே அச்சுறுத்தித் தடுப்பது மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அப்பா விப் பொதுமக்கள் மீது பிரயோகிப்பத னூடாக நினைவேந்தல் செயற்பாடுகளி லிருந்து தமிழ் மக்களை விலக வைப்ப தற்கு சிறிலங்கா அரசு முழுவீச்சில் செயற்பட்டு வருகின்றது. மக்களின் நினைவுகளை அழிப்பதற்கு முயல்வத னால் சிறிலங்கா அரசும் அதன் படைத் தரப்புகளும் தமிழ் மக்கள் தமது உரிமை களுக்காக கூட்டுச் சேர்வதனையும் தம் மீது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயன்முறைகளுக்கு எதிரான துலங் கல்களை வெளிப்படுத்தவும் முடியா தவொரு நிலையை ஏற்படுத்த முயற்சிக் கின்றன.

தமிழ்மக்களின் வலிகள் கூறும் நினை வுத் தூபிகளை அழித்தல் மற்றும் தமது போர் வெற்றிச் சின் னங்களை நிறுவுவ தன் ஊடாக தமிழ் மக்களின் நினைவு களை அழிப்பதில் பெரிதாக எதையும் சாதித்திராத சிறி லங்கா அரசு முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் செயல்என்பதுதமிழ் மக்களிடையே முன் னரை விட எழுச்சி யோடு முன்னெடுக் கப்பட்டு வரும் நிலை யில்அதனைத்தடுப்ப தன் ஊடாகத் தனது ஆக்கிரமிப்பை சாதித்துவிட முனை கின்றது -என்றுள் ளது.

(அ-ஓ-66-125)


## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் (புத்தகசாலை) மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கான வேலைவாய்ப்பு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:

**077 494 9683, 077 077 6469**

## கேள்வி அறிவித்தல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது எரிபொருள் நிலைய முன்புற நிலம் புனரமைப்புக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகளைக் கோருகின்றது என்ற விளம்பரம் 07.05.2024இல் பிரசுரிக்கப்பட்டது. விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 16.05.2024 திகதி காலை 10.00மணி எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேற்படி திகதியானது 22.05.2024 காலை 10.00மணிவரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

(cr.42463) (N-1)

தலைவர்.

## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்
### பிரிவு - 53

* Diploma in English / Spoken English
* Diploma in ICT / AI
* Diploma in Psychology & Counselling
* Diploma in Leadership & Business Management
* Diploma in Political Science

புதிய பிரிவுகள் ஆரம்பம் :-25, 26/05/2024 - 10.00 AM

*காலம் : 03 மாதங்கள் *சான்றிதழ் பிரிவுகள்

IPS to your future Thirunelvely, T.P: 074 234 9120

(CS 522)A-1


## மிதிவெடிகள் மீட்பு

யாழ்., மே 18

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுருவிலில் வெற் றுக் காணியிலி ருந்து 3 மிதிவெடிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. காணியின் உரிமையாளர் காணியை துப்புரவு செய்யும் போது மிதிவெடிகள் அவதானிக்கப்பட் டுள்ளன. பொலி ஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. நீதிமன்ற அனுமதி யுடன் அவை அகற்றப்படவுள் ளன. (ஓ-27)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணிற்கு 20.05.1944 விண்ணிற்கு 18.05.2020

**அமரர் திரு. கந்தையா சிவபாதம்**

( ஓய்வுபெற்ற பிரதி அதிபர் ஆசிரியர் கலாசாலை பலாலி )

எம்மோடு இருந்த காலம்
போதுமென்றோ சென்றீர்கள்
கண்முன்னே கலங்கரை விளக்காய்
வழிகாட்டி நின்றீர்கள்
மண்விட்டு நீங்கள் மறைந்தாலும்
எம் மனதில் என்றும் பசுமையாய்
உங்கள் நினைவுகளுடன்..

(CS/514) J-1 குடும்பத்தினர்

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 08.12.1966



இறப்பு 18.05.2011

**சுப்பிரமணியம் அரியரத்தினம்**

ஆண்டுகள் பதின்மூன்று ஆனது ஐயா
மாநிலத்தில் நீபிரிந்து!
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
நாம் இங்கு!
உறவுகளைத் தவிக்கவிட்டு
இமைகளை மூடிவிட்டாய்!
எம்மையெல்லாம் அழவிட்டு
இறைவனை நாடிவிட்டாய்!
உன்னை எண்ணித் தினம் தினம்
மனம் வெதும்புகின்றோம்!
நீ மறைந்த நாள் முதலாய்
நிம்மதி எமக்கு இல்லை ஐயா!
நினைவிழந்து செயலிழந்து
நிர்க்கதியாய் நிற்கிறோம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வேம்படி, காரைநகர். குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலில் நடக்கப்போவது நாடாளுமன்றத் தேர்தலே

## இப்படிச் சொல்கிறார் டிலான் பெரேரா

கொழும்பு, மே 18

**ஜனாதிபதித் தேர்தல் பக்கம் அரசியல் கட்சிகளின் பார்வையைத் திருப்பிவிட்டு முதலில் பொதுத்தேர்தலை நடத்துவதே ஜனாதிபதியின் திட்டமாகவுள்ளது என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து இந்தத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்றே கூறப்படுகின்றது. அது பற்றியே எல்லோரும் கதைக்கின்றனர். ஆனால், உண்மை நிலைவரம் அதுவல்ல, அனைவரினதும் பார்வையை ஜனாதிபதித் தேர்தல் பக்கம் திருப்பிவிட்டு, முதலில் பொதுத்தேர்தலை நடத்துவதே ஜனாதிபதியின் திட்டம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சிலர் இணைந்து இது தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் தீர்மானமும் எடுத்துவிட்டனர்.

புலனாய்வு அமைப்பின் அறிக்கை மற்றும் அரசால் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளில் ஜனாதிபதித் தேர்தலில் அரசு படுதோல்வி அடையும் என்பது உறுதியாகியுள்ளது. நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிட்டாது, எனவே, உறுதிப்பாடற்ற நாடாளுமன்றத்தை ஏற்படுத்தி அதன்மூலம் அரசியல் இலாபம் தேடும் நோக்கிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலையும் பிற்போடமுடியாது. எனினும், தோல்வி உறுதி என்பதால்தான் இப்படித் திட்டமிடப்படுகின்றது - என்றார். (அ-ஒ-44)

# இரட்டைக் கொலை: சாட்சிக்கு அச்சுறுத்தல்

வவுனியா, மே 18

வவுனியா, தோணிக்கலில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபருடன் தொடர்பில் உள்ள பெண் கிராம அலுவலரால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சாட்சியாளர் வவுனியா நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் 23ஆம் திகதி வீடு புகுந்து தாக்குதல் நடத்தி பெற்றோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சப்பவத்தில் கணவன் மற்றும் மனைவி இருவரும் உயிரிழந்திருந்தனர். இரட்டை கொலை சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகத்தில் ஏழு பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்கு வவுனியா நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற வீட்டு உரிமையாளரான சுரேஸ் மன்றில் முன்னிலையாகி சாட்சியமளித்திருந்தார். தனது வீட்டில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் எரிகாயங்களுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று தற்போது கல்வி கற்று வரும் தனது மகள் இச்சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை அடையாளம் காட்டியிருந்தார். இதன் பின்னர் பிரதான சந்தேகநபருடன் தொடர்புடைய பெண் கிராம அலுவலர் எனது மகள் கல்வி கற்க செல்கின்றபோது அங்கு நின்று மகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளார். நான் அங்கு சென்றதும் அவர் அங்கிருந்து சென்றுள்ளார். பெண் கிராம அலுவலரால் அச்சுறுத்தல் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கிராம அலுவலர் சம்பவத்தின்போது உயிரிழந்த சுகந்தனுடன் முன்னர் இணைந்து வாழ்ந்து வந்ததாகவும், அதன் பின் சுகந்தனின் நண்பரும் பிரதான சந்தேகநபருமாகிய தடுப்பில் உள்ள நபர் கிராம அலுவலரைக் காதலித்து அழைத்துச் சென்று வாழ்ந்து வந்ததாகவும் தெரிவித்ததுடன், அதனால் ஏற்பட்ட முரண்பாடு இக் கொலைக்குக் காரணம் என சாட்சியமளித்திருந்ததாகத் தெரிவித்தார்.

மன்றால் இவ் வழக்கு தவணைக்காக அடுத்த மாதம் 7 ஆம் திகதியிடப்பட்டுள்ளது. இதேவேளை - இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் மூவர் தலைமறைவாகியுள்ளதுடன், அவர்களுக்கு பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ-18)

# உரும்பிராயில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு தமிழினப் படுகொலை வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் உரும்பிராயிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. (அ-ஒ-66)

# ரத்துபஸ்வல துப்பாக்கிச்சூடு; சிப்பாய்கள் விடுவிப்பு

கொழும்பு, மே 18

கம்பஹா - ரத்துபஸ்வலவில் சுத்தமான குடிதண்ணீர் வழங்குமாறு கோரி 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ மேஜர் ஜெனரல் அருண தேசப்பிரிய குணவர்த்தன உள்ளிட்ட நால்வரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதிகளான நிமல் ரணவீர, நிஷாந்த ஹப்புஆராய்ச்சி, சஹன் மாபா பண்டார ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழுவால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகமின்றி நிரூபிப்பதற்குத் தவறியுள்ளமையால், நீதிபதிகள் குழாம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. (அ-ஒ-இ)



# ஒரு பில்லியன் டொலர் ஆயுதம் உக்ரைனுக்கு!

வொஷிங்டன், மே 18

உக்ரைனுக்கு ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்குவதற்கு அமெரிக்க அதிபர் பைடன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராக ரஷ்யா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை கடந்த இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது. முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த ஒரு மாதகாலமாக இந்தப் போரில் உக்ரைன் பின்னடைவைச் சந்தித்துள்ளது. ஆயுதப் பற்றாக்குறையே இந்தப் பின்னடைவுக்குக் காரணம் என்று உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ள பின்னணியில், உக்ரைனுக்கு ஒரு பில்லியன் டொலர் பெறுமதியான உதவியை வழங்குவதற்கு பைடன் தற்போது முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்று ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது.

வெள்ளை மாளிகையிடம் இவ்வாறான திட்டம் காணப்படுவதை உறுதிசெய்துள்ள அதிகாரியொருவர் எனினும் இதற்கு அமெரிக்க காங்கிரஸின் அனுமதி அவசியம் எனத் தெரிவித்துள்ளார். இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்கா மிகப்பெரியளவில் குறைத்துள்ள பின்னணியில், அந்த ஆயுதங்கள் உக்ரைனுக்குச் செல்வதற்கு வாய்ப்புள்ளதாகவும் கருதப்படுகின்றது. (ம)

# தற்போதைய அரசியலில் கிளர்ச்சிக் குழுக்களாம்

## முன்னாள் தளபதி தெரிவிப்பு

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் மற்றும் கிளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய குழுக்கள் தற்போதைய அரசியலில் இருப்பதால் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. அதன்காரணமாகவே ஐக்கியமக்கள்சக்தியுடன் இணைந்து அரசியல் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொருளாதார நெருக்கடியால் நாடு எத்திசையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது? பாதுகாப்பைவிட தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்கான பணிக்கு பங்களிக்கவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. இது அரசியல் ரீதியிலான பிரச்சினையும் கூட. எனவே, ஐக்கிய மக்கள் சக்தி என்ற குழுவால் மாத்திரமே பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க முடியும் என நம்புகின்றோம். இதற்குத் தேவையான ஒத்துழைப்பை இராணுவத்தினர் என்றவகையில் நாம் வழங்குவோம். நாட்டையும், நாட்டு மக்களையும் நெருக்கடியில் இருந்து மீட்கவே நாம் மீண்டும் வந்துள்ளோம்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிட்டேன், சஜித் பிரேமதாஸவும் களமிறங்கினார், மற்றைய தரப்பிடம் ஆட்சி அதிகாரம் சென்றால் என்ன நடக்கும் என்பதைச் சுட்டிக்காட்டினோம். இறுதியில் நாம் அனைவரும் நெருக்கடி நிலைக்கு உள்ளானோம். நாடு தற்போது பயணிக்கும் வழியைப் பார்க்கும்போது மீண்டும் தீவிரவாதம், கிளர்ச்சி, புரட்சி மற்றும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பமுடியாத நிலைக்கு நாட்டைக் கொண்டுவரக்கூடிய குழுக்கள் அரசியலில் உள்ளன.

எனவே, இதுபற்றி நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் பொறுப்பு எம்மைப்போன்ற பொறுப்புமிக்கவர்களுக்கு உள்ளது. அடுத்த தேர்தலின்போது சரியான தலைமைத்துவத்தையும், குழுவையும் தெரிவு செய்யும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. நாம் காணும் சிறந்த தலைமைத்துவம், குழு ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் உள்ளது. அதனால்தான் இணைந்துள்ளோம் - என்றார். (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி கொலை: கணவனுக்கு மறியல்

யாழ்ப்பாணம், மே 18

உடுத்துறையில் இளம் குடும்பப் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட கணவனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உடுத்துறை வடக்கைச் சேர்ந்த ஜெகசீலன் சங்கீதா (வயது-44) என்ற 3 பிள்ளைகளின் தாய் கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கடந்த புதன்கிழமை கணவரை கைது செய்தனர். சந்தேக நபரான கணவரை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ஒ-100)

# பசுமை இயக்கத்தின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 18

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் கந்தர்மடத்தில் அமைந்துள்ள அதன் தலைமைச் செயலகத்துக்கு முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிப் பரிமாறப்பட்டது.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் கஞ்சி பரிமாறுதலின்போது தென்னம்பிள்ளைகளும் வழங்கி வைக்கப்பட்டன. (அ-ஒ-66)

# வடக்கு அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்குவேன்

## அமெரிக்கத் தூதுவர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மே 18

வடக்குமாகாண அபிவிருத்திக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்கத் தயார் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இடையில் வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நேற்று சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு ஆளுநர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்;

வடக்கு மாகாண அபிவிருத்திச் செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கால்நடை உற்பத்திகளை மேம்படுத்த வேண்டியுள்ளதாகவும், இயந்திர தொழில்நுட்ப பயன்பாட்டை மக்கள் மயப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

காணி விடுவிப்பு, விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான வசதிகள் தொடர்பிலும் அமெரிக்க தூதுவர், ஆளுநரிடம் கேட்டறிந்துக்கொண்டார். ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பிரவேசிப்பதற்கான வீதிகள் உரிய நடைமுறைகளை பின்பற்றி திறக்கப்படுவதாகவும் ஆளுநர் கூறினார். மேலும், வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய கண்காட்சி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவரிடம், ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

வடக்குக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளதாக தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், மாணவர்களுக்கு இலவச ஆங்கில மொழி வகுப்புக்களை ஆரம்பிக்க உள்ளதாகவும், அதற்கான ஒத்துழைப்புகளை ஆளுநரிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். 27 வருடங்களின் பின்னர் அமெரிக்க அமைதி காக்கும் கழகத்தின் ஊடாக இலங்கையில் இலவச ஆங்கில மொழி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமெரிக்கத் தூதுவர் கூறினார் - என்றுள்ளது. (அ-ஒ-5-26-66)



# ரணில் வராவிட்டால் நான் வருவேன்!

கொழும்பு, மே 18

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறங்காவிட்டால் மாத்திரமே தான் போட்டியிடவுள்ளார் என மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியுள்ளார் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தொடர்பில் உள்ளகரீதியில் நடத்தப்பட்ட கருத்து கணிப்பை அடிப்படையாகக்கொண்டே தம்மிக்க பெரேரா இவ்வாறு கூறியுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (அ-ஒ-44)

## நல்லூரில்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில், 15 ஆவது ஆண்டு முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நினைவுநாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் நல்லூர் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள தமிழினப் படுகொலைச் சாட்சிய முற்றத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை - புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, கலைமதி சனசமூக நிலையம், கலைமதி விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து முள்ளிவாய்க்கால் 15 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதான அரங்கில் இடம்பெறவுள்ளது. (அ-ஒ-66)

## இன அழிப்பின்...

முள்ளிவாய்க்கால் தந்த துயர வலிகளை மனங்களில் நிறுத்திக்கொண்டு உயிர் பறிக்கப்பட்ட தமது உறவுகளுக்கான சுடரேற்றி அஞ்சலி செய்யும் நிகழ்வுகளில் தமிழ் மக்கள் இன்று ஈடுபடவுள்ளனர்.

ஈழத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட ஆகப் பிந்திய - மிகமோசமான இந்தப் படுகொலையின் பெரும் துயரை நினைவேந் தும் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தில் மாத்திரமல்லாது, பூமிபந்தெங்கும் ஈழத் தமிழர்கள் பரவி - சிதறி வாழும் தேசங்களிலும் நடைபெறவுள்ளன.

"முள்ளிவாய்க்காலில் மூச்சையாகிப் போனவர்களுக்கு எந்தப் பெறுமதியையும் இந்த உலகம் தரவில்லை. வெறுங் கையோடு மாத்திரம் பார்த்துக் கொண்டிருக்கின்றது. எம்மீது திணிக்கப்பட்ட வன்கொடுமைகளின் நினைவுகள் மட்டும்தான் எம்மிடம் எஞ்சியிருக்கின்றது. முள்ளிவாய்க்கால் கொடுந்துயரின் பின்னரும் எஞ்சியிருக்கும் அந்த நினைவுகளையாவது நாம் இறுகப் பற்றிக்கொள்ள முயற்சிக்கின்றோம். அந்தத் துயரவலிகள் நினைவுகளால் ஒத்தடம் பெறுவதை உணர்கின்றோம். எனவே எமது நினைவுகளை மீள் நிறுத்தி, எம்மின விடிவுக்காக மூச்சடங்கிப் போனவர்களுக்கும், கொத்தாகக் கொன் றொழிக்கப்பட்ட மக்களுக்காகவும், முள்ளிவாய்க்கால் மண்ணில் நடைபெறும் நினைவேந்தலில், தாயக மக்கள் அலையென அணி திரண்டு அஞ்சலிக்கவேண்டும்" என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## தமிழர்கள்...

விடுவித்தமை தொடர்பில் நீதிமன்றில் தனது தரப்பு உண்மைகளை முன்வைக்கு மாறு கோரி கோத்தாபயவுக்கு அழைப்பாணை அனுப்புமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மாற்றுக் கொள்கை மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கிய சோதி சரவணமுத்துவால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு யசந்த கோதா கொட மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனு அழைக்கப்பட்ட நேரத்தில், மனுதாரர் தரப்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி [illegible] இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் ஜனாதிபதியின் மன்னிப்பின் பின்னர் விடுவிக்கப் பட்ட இராணுவ சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்க ஆகியோருக்கு நோட்டீஸ் அனுப்புமாறு நீதிமன்றில் கோரினார். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் குழாம், சம்பந்தப்பட்டோருக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியது தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவுக்கு நோட்டீஸ் அனுப்பவும் உத்தரவிட்டது. அத்துடன், மனுவில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுவிக்கப் பட்ட இராணுவ சார்ஜண்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு நோட்டீஸ் அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஒ-இ)

## முள்ளிவாய்க்கால்...

நவரெட்ணராஜா ஹரிகரகுமார் (வயது - 43), கமலேஸ்வரன் விஜித்தா (வயது - 40), கமலேஸ்வரன் தேமிலா (வயது - 22), செல்வ வினோத்குமார் சுஜானி (வயது - 40) ஆகிய நால்வரும் மூதூர் நீதிமன்றத் தால் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தலா ஒரு இலட்சம் ரூபா ஆள் பிணையில் இவர்களை மூதூர் நீதிபதி தஸ்னீம் பௌசான்பானு விடுவித்தார். வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. சம்பூர் பொலிஸார் இவ் வழக்கை ஐ.சி.சி.பீ.ஆர். சட்டத்தின் கீழ் முன்வைத்திருந்த போதும், இவ் வழக்கு மீளவும் நகர்த்தல் பத்திரம் மூலம் எதிராளிகள் தரப்பினால் முன்வைக்கப்பட்டபோது தாம் முன்னர் முன்வைத்த சட்டப்பிரிவின் அடிப்படையிலான குற்றச்சாட்டை விலக்கிக் கொள்வதாக சம்பூர் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். எதிராளிகள் தரப்பில் சட்டத்தரணிகளான ந.மோகன், பி.முகுந்தன், தே.ரமணன் ஆகியோர் முன்னிலையாகி இருந்தனர். (அ-ஒ-50)

## வேலணையில்...

உயிர் நீத்த உறவுகளை நினைவுகூர்ந்து பிரதேசவாசிகளால் ஈகச்சுடரேற்றபட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதே வேளை - முள்ளிவாய்க்கால் கஞ்சியின் வரலாற்றை உள்ளடக்கிய துண்டறிக்கையும் விநியோகிக்கப்பட்டது.

வேலணையில் நினைவு ஊர்திப் பவனியும் இடம்பெற்றபோது வேலணைப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கருணாகரன் நாவலன் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

காரைநகரில் இன்று முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலும் நினைவூர்திப் பவனியும் இடம்பெற்று, இறுதி நினைவேந்தல் வட்டுக்கோட்டைத் தொகுதியின் துணவி வீரபத்திரர் ஆலய முன்றிலில் மாலை 5 மணியளவில் நடைபெறும். (அ-ஒ-125)

## மாலையில்...

துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி த. பிரதீபன் தெரிவித்தார்.

மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு மழை நேரங்களின்போது திறந்த வெளிகளில் நடமாடுவதை தவிர்த்துக் கொள்வதோடு 'கேபிள்' தொலைபேசி இணைப்புகளைத் துண்டிக்க வேண்டும். அதுமட்டுமல்லாது மின் இணைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள மின் சாதனங்களின் வயர்களை அகற்றுவதோடு உயரமான கோபுரங்களுக்குக் கீழே நிற்பதைத் தவிர்க்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ-ஒ-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

ரும் அவர்களுடன் தொடர்புடைய ஆயுதக்குழுக்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் ஏற்றுக்கொள்வதுடன் அதற்கான பொதுமன்னிப்பை இலங்கை அரசு கோரவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலுக்கான பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கைப் பாதுகாப்புப் படையினராலும் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய துணை இராணுவக் குழுக்களாலும் அவர்களின் எதிரிகளாகக் கருதப்படுபவர்களை அச்சுறுத்தி ஒடுக்குவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தும் நோக்கில் குறைந்தது பல்லாயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகவுள்ளது. அனைத்து புடிநிலைகளிலும் குற்றவாளிகள் நீதியின் பிடியிலிருந்து தப்பித்து வருகின்றார்கள். தண்டனையின் பிடியிலிருந்து தப்பிப்பதானது ஆழமாக வேரூன்றியுள்ளது. குடும்பங்கள் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவினர்களின் கதி மற்றும் இருப்பிடம் பற்றிய தகவலெதனையும் அறியமுடியாத நிலையில் உள்ளன. கட்டமைப்புகளின் பலவீனங்களைக் கையாள்வதிலும் அவசியமான சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதிலும் தோல்விகள் ஏற்பட்டுள்ளதால் காணாமல் ஆக்கப்படல் மீளவும் நிகழ்வதற்கான ஆபத்து உறுதியாகக் காணப்படுகின்றது என்று முகவுரையில் குறிப்பிட்டுள்ளது.

ஆணையாளர் அலுவலகம் முன்வைத்துள்ள பரிந்துரைகளில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அளவையும் மற்றும் காணாமல் ஆக்கப்படலில் பாதுகாப்புப் படையினரும் அவர்களுடன் தொடர்புடைய ஆயுதக்குழுக்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதையும் ஏற்றுக்கொள்வதுடன் அதற்கான பொதுமன்னிப்பை இலங்கை அரசு கோரவேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்படல் தொடர்பிலான விசாரணைகளையும், வழக்குகளையும் தொடர்வதற்கு ஏற்ப பயனுள்ள கட்டமைப்பை உறுதிப்படுத்தவும் மற்றும் சுதந்திரமான விசாரணைகளைத் தீவிரப்படுத்தவும் அரசமைப்பு மற்றும் சட்டசீர்திருத்தங்களை விரைவுபடுத்துமாறு இலங்கைக்கு அழைப்புவிடுக்கின்றோம்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் மிகப்பெரிய மீறல்கள் மற்றும் மோசமான சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளைக் கையாள்வதற்கு சுயாதீனமான அரச சட்டத்தரணிகளின் அதிகாரம், ஒரு சிறப்பு அரச சட்டத்தரணி மற்றும் தற்காலிக ஒரு சிறப்பு நீதிமன்றம் ஆகியவற்றை உடனடியாக இலங்கை நிறுவவேண்டும்.

அதிகளவான பரிந்துரைகள், காணாமற்போனோருக்கான அலுவலகத்தை மேம்படுத்துதல் மிகப்பெரிய மனிதப் புதைகுழிகள் தொடர்பில் சிறந்த முறையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தல் மற்றும் தொடர்புடைய காப்பகங்கள் மற்றும் ஆணைக் குழுக்களின் அறிக்கைகளிலிருந்து தகவல்களை கிடைக்கச் செய்தல் ஆகியவற்றைநோக்கிமுன்வைக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு புதிய உண்மையைத்தேடும் பொறிமுறையேனும் நிறுவப்படுவதற்கு முன், மனித உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குழுக்களுக்கு எதிரான சட்டவிரோத மற்றும் தன்னிச்சையான கண்காணிப்பு, அனைத்து வகையான அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் போன்ற செயல்கள் நிறுத்தப்படு தல் உள்ளிட்ட முக்கியமான நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுக்கவேண்டும்.

எந்தவொரு உண்மையைத்தேடும் பொறிமுறையும் நீதித்துறை பொறிமுறையை உள்ளடக்கிய விரிவான ஒரு நிலைமாறுகால நீதிக்கான மூலோபாயத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டும். இதேபோல் ஒரு விரிவான மற்றும் பால்நிலை - உணர்திறன் கொண்ட அணுகுமுறையை இழப்பீடுகளுக்குப் பரிந்துரைக்கிறது.

நம்பத்தகுந்த வகையில் மீறல்களில் ஈடுபட்டவர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை உயர்மட்டப் பதவிகளுக்கு நியமிப்பதை அல்லது ஊக்குவிப்பதைத் தவிர்ப்பது உட்பட வலிந்து காணாமல் ஆக்கப்படல் மீண்டும் நிகழாமல் தடுக்க உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

மனித உரிமைகள் ஆணையகத்தின் ஊடாக இலங்கையின் பொறுப்புக்கூறலை நோக்கிய அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பான விடயங்களை சர்வதேச சமூகம் தொடர்ந்து உன்னிப்பாக அவதானிப்பதுடன் அதன் இருதரப்பு மற்றும் பலதரப்பு உறவுகள், உலகளாவிய அதிகார சட்டவரம்பு மற்றும் சர்வதேச நீதித்துறையில் உள்ள பிறவழிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது உட்பட இலக்குத் தடைகள் விதித்தல் போன்ற பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவல்ல அனைத்து வழிகளையும் பயன்படுத்தவேண்டும், ஆகியனவற்றைக் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ-5)

## தேசியத்...

புலிகள் அமைப்பின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நந்திக்கடலில் இடம்பெற்ற வெளியேற்ற முயற்சியின் போது உயிரிழந்ததாக இலங்கை அரசு அறிவித்திருந்ததுடன் அவரது முகத்தை ஒத்த உருவ அமைப்புள்ள ஒரு உடலத்தையும் காண்பித்திருந்தது.

ஆனால், இதுவரை அவரது இறப்பை உறுதி செய்யும் வகையிலான மரபணு பரிசோதனை உள்ளிட்ட விஞ்ஞானரீதியான ஆதாரங்கள் எதனையும் இலங்கை அரசு வெளியிட்டிருக்கவில்லை. அதற்கான முயற்சிகளும் அன்று தொடக்கம் இன்றுவரை முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான நிலையில் வே.பிரபாகரன் அவர்களது உயிரிழப்புத் தொடர்பில் உலகத்தமிழர்களிடையே எதிர்மறையான நிலைப்பாடே இருந்து வருகிறது. இந்நிலையில், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாரகன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வீரவணக்க நிகழ்வு டென்மார்க்கில் இன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

நினைவேந்தல் தொடர்பில் வேலுப்பிள்ளை மனோகரன் கருத்துத் தெரிவிக்கையில்;

"எனது தம்பி பிரபாகரனுக்கும், மைத்துனி மதிவதனிக்கும், பிள்ளைகள் சார்ள்ஸ், துவாரகா மற்றும் பாலச்சந்திரன் ஆகிய ஐவருக்கும் வீரவணக்க நிகழ்வை நடத்த உள்ளேன். எதிர்கால வரலாற்றில் எனது தம்பியின் வாழ்வை பிழையாகச் சித்திரிக்கப் பல ரும் முயற்சி செய்து வருவதால் நான் இந்த முடிவை எடுக்கத் தீர்மானித்துள்ளேன். 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப்போரில் எனது தம்பி பிரபாகரன் மற்றும் அவரது குடும்பத்தில் உள்ள அனைவரும் தாய்மண்ணுக்காக தங்களது இன்னுயிரை ஈந்தார்கள் என்பது உலகறிந்த உண்மை. இந்த வீரவணக்க நிகழ்வுக்குப் பின்னராவது எனது தம்பியின் பெயரைப் பயன்படுத்தி மோசடி வேலைகளில் ஈடுபட்டு வரும் மோசடிக் கும்பலை இனம்கண்டு மக்கள் புறக்கணிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன். அனைத்து தமிழ் மக்களையும் தனது உறவாக நினைத்து வாழ்ந்த எனது தம்பி மற்றும் அவரது குடும்பத்தினருக்கு நடைபெற இருக்கும் வீரவணக்க நிகழ்வில் பங்குபற்றி அவர்களுக்கு வீரவணக்கத்தைச் செலுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்" என வேலுப்பிள்ளை மனோகரன் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ஒ-100)

## தமிழ்த்...

ஆதரித்து தமிழ் மக்களின் தேசியத் திரட்சியைப் பாதுகாக்கவேண்டும் என்று சிவில் சமூகங்களின் கூட்டிணைவு அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு விடுத்துள்ள அறிக்கையில், மே 18 இன அழிப்பு நினைவுநாளில் அனைத் துத் தமிழ் உறவுகளையும் உணர்வுபூர்வமாக ஒன்றிணையுமாறு அழைக்கிறோம்.

எல்லா நினைவேந்தல்களும் தமிழ் மக்களை ஒருணர்ச்சிப் புள்ளியில் குவிக்கின்றன. அவை தாயகத்தில் மட்டுமல்ல உலகப் பரப்பெங்கும் தமிழ் மக்களை ஒருணர்ச்சிப் புள்ளியில் குவிக்கின்றன. வடக்குக் கிழக்காக சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயகத்தை அவை உணர்வுபூர்வமாகப் பிணைக்கவல்லன. அதனால்தான் கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுவதற்கும் பரிமாறுவதற்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கடந்த ஆண்டிலிருந்து கிழக்கில் நினைவேந்தலுக்கு எதிராக நெருக்கடிகள் அதிகரித்து வருவது தற்செயலானது அல்ல. வடக்கும் கிழக்கும் உணர்வுபூர்வமாக இணைவதை, தமிழர்களின் தாயகம் ஒருணர்ச்சிப் புள்ளியில் ஒன்றிணைவதைத் தடுக்க விரும்பும் சக்திகள் கிழக்கில் நினைவேந்தலைத் தடுக்கின்றன.

இந்த அடிப்படையில் திருகோணமலை - சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிய குற்றச்சாட்டில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகிய எமது உறவுகளோடு தமிழ் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு தன் தோழமையை உறுதிப்படுத்துகின்றது. அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப் பட்ட நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றது. ஜனாதிபதி தற்போது முனைப்புக் காட்டும் உண்மை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை ஏன் நம்ப முடியாது என்பதற்கு மேற்படி கைது நடவடிக்கைகள் போதிய சான்றுகள் ஆகும்.

நினைவேந்தலை ஆகக் கூடிய மட்டும் பரவலாக்குவதும் தொடர்ச்சியானது ஆக்குவதும்தான் இத்தருணத்தில் தமிழ் மக்கள் செய்யவேண்டியவை. கிழக்கில் ஓர் ஊரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தடுத்தால் ஏனைய எல்லா ஊர்களிலும் அதை பரவலாக்கவேண்டும். இன்று நமது சிவில் சமூக கூட்டிணைவில் வரும் அனைத்து சிவில் சமூகங்களும் தத்தமது எல்லைகளுக்கு உட்பட்டு தத்தமது பிரதேசங்களில் நினைவேந்தலை கடைப்பிடிக்குமாறும் நினைவேந்தும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு கொடுக்குமாறும் வேண்டுகிறோம்.

மே 18, தமிழ் மக்களை ஓர் உணர்ச்சிப் புள்ளியில் இணைக்கின்றது. அது தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உணர்வுபூர்வமாகப் பாதுகாக்கின்றது. அவ்வாறு தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் உறுதிப்படுத்தும் விதத்தில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்தவேண் டும் என்ற கோரிக்கையை நமது சிவில் சமூகங்களின் கூட்டிணைவு முன்வைக்கின்றது - என்றுள்ளது. (ஒ-இ)

## தவறி...

கடந்த 12 ஆம் திகதி அயல் வீட்டு மாமரத்தில் ஏறி தவறி விழுந்து மயக்கமடைந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஒ-26)

விவசாயிகளுக்கு
இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Power weeder (களை பிடுங்கும்)
6.5 HP டீசல் மற்றும் பெற்றோல் இயந்திரங்கள் இப்பொழுது எம்மிடம்.
இது Greaves நிறுவனத்தின் ஒரு தயாரிப்பு
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

ஆர்க் .என். கம்பனி
•150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
• A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
• A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 973 9917
(cs.55105) N-1)

கோழிகள் முட்டைகள் மலிவு விலையில்
யாழ்ப்பாணத்தில் 34 வருட பூர்த்தியை முன்னிட்டு கோழிகள் முட்டைகள் மலிவு விலையில்
➤ இலங்கையில் No 1 சிக்கன் விற்பனையாளர்,
➤ வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் 18.05.2024 அன்று காலை 08.30 மணிக்கு அடுத்த கிளை பரமேஸ்வரா சந்தி அருகாமையில் ராமநாதன் வீதியில் நியூ சிற்றி கோழிக்கடை திறக்கப்படுகின்றது.
➤ வாடிக்கையாளர் நலன் கருதி 24 மணி நேர சேவை
➤ புறோயிலர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்கோழி, முட்டைகள்
➤ மொத்த கொள்முதலுக்கு ரான்ஸ்போட் இலவசம்
எமது தலைமை காரியாலயம் இல 8 குருநகர் மாக்கற் முன்பாக யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு:
021 430 3354, 076 359 3354
(CS 518) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு உண்டு

சோமசுந்தரம் அவென்யூவில்
1 3/4 பரப்பு காணியில் வாகன
தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு
விற்பனைக்கு உண்டு.

(CS 55108) S-1

தொடர்பு: 076 116 3919

## தவறவிடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் மானிப்பாய்
வீதியில் ஒருதொகைப் பணம்
தவறவிடப்பட்டுள்ளது.
கண்டெடுத்தவர்கள்
தொடர்புகொள்ளவும்.

075 270 5115

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா
ஆலோசனை மற்றும் வங்கி மீதி
(Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

074 173 7684

## NEC

யாழ் நகர்

A/L-2026
கலை
வர்த்தகம்
ஆரம்பம்
MAY 19
ஞாயிறு காலை 09.00 மணி

மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்வதற்காக
இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது

அலுவலக தொடர்பு: 076 535 0999

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில்
31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

(CS/488) J-1

தொடர்பு :- 077 886 2927

## கணிதம் 06 - O/L வகுப்புக்கள்

மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப
தனியாகவோ, குழுவாகவோ
வீடுகளுக்கு வந்து
அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
தேசிய ரீதியாக சிறந்த பெறுபேறுக்காக
வழிகாட்டும் உங்கள் கணித ஆசான்.

(CS/55071) J-1

T.P. 077 482 5438

## கார் விற்பனைக்கு

Nissan Sunny Fb 15,
Colour - Silver
Auto Keyer கார்
விற்பனைக்கு உண்டு.

(CS/55069) J-1

077 199 6117

## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD VICTORY MUST

கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

### A/L 2026
### Tamil & English Medium

நேரடி வகுப்புக்கள் மற்றும் **Zoom** இன் ஊடான
இணையவழி வகுப்புக்கள்

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R.குமரன் <br> திரு. R.குகன் |
| இரசாயனவியல் | திரு. டயஸ் <br> திரு. K.T.சிவகுமார் |
| உயிரியல் | திரு. N.T.கஜேந்திரன் |
| இணை.கணிதம் | திரு. S.S.செந்தில்ராஜ் <br> திரு. V.ஹரிகரன் |
| ICT | திரு. T.லவேந்திரன் |

**ஆரம்பம் :- 23.05.2024 (வியாழக்கிழமை) காலை 8.00**

**அனுமதிகளை 19.05.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று
காலை 9.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

மேலதிக விபரங்களுக்கு :-
077 336 4055, 021 221 6690,
077 336 4030, 075 836 4055

New Science World
Navalar Road, Brown Road Junction, Jaffna.

## NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD JAFFNA

**2026 A/L கணித உயிரியல் பிரிவுகள்**
நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

| தமிழ்மொழி மூலம் | ENGLISH MEDIUM |
|---|---|
| **PHYSICS** | **PHYSICS** |
| திரு. G.பிரபா <br> திரு. N.கபிலன் <br> திரு. R.ராகுலன் | MR.M.KUGANESWARAN <br> MR.R.RAAKULAN |
| **CHEMISTRY** | **CHEMISTRY** |
| திரு. G.BENO <br> திரு. V.K.நந்தா | MR.G.BENO <br> MR.V.K.NANTHA |
| **BIOLOGY** | **BIOLOGY** |
| திரு. V.S. குணசீலன் <br> திரு. K. இராகவன் | MR.V.S.GUNASEELAN |
| **COM.MATHS** | **COM.MATHS** |
| திரு. P. செந்தில்நாதன் <br> திரு. V.S. சிவகரன் | MR.P.SENTHILNATHAN <br> MR.V.S.SIVAKARAN |

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன**

ஆரம்பம் - 19.05.2024 (Sunday)
நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து
இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு- 0765693006, 0765663006, 0777917611

## A/L தொழினுட்பப்பிரிவு

## Techna

Smart thinking leads to innovate

Technical Institute

### புதிய பிரிவு ஆரம்பம்

### A/L 2026

19.05.2024(ஞாயிற்றுக்கிழமை)
காலை 8.00 மணிக்கு

| | |
|---|---|
| உயிர் முறைமைகள் தொழினுட்பவியல் | |
| M.விஷ்ணு | P.நிறோஜனன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | |
| S.சக்தி | |
| பொறியியல் தொழினுட்பவியல் | |
| S.மயூரதன் | |
| ICT | கணிதம் |
| T.லவன் | T.சசிகரன் |
| விவசாய விஞ்ஞானம் | புவியியல் |
| S.சஜீபன் | S.P.கரன் |

**மாணவர்கள் TECHNAவை ஏன் தெரிவு செய்ய வேண்டும்?**

மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனிப்பு.
தொடர்ச்சியாக 7 நாட்களும் வகுப்புக்கள் நடைபெறும்.
மாதாந்தப் பரீட்சை, அலகுப் பரீட்சை, தவணைப்பரீட்சைகள்
புள்ளிகளுக்கேற்ப Z.SCORE மூலமான தரப்படுத்தல்.
பாடங்களுக்கான கையேடுகள் வழங்கப்படும்.
அனுபவம்மிக்க ஆசிரியர்களின் வழிகாட்டல்.
குழு அடிப்படையிலான செயன்முறை பயிற்சி வகுப்புக்கள்
களப்பயணங்களை மேற்கொள்ளல்.
இறுதிப்பரீட்சையை நோக்கிய விளைத்திறனான தயார்படுத்தல்.

தொழினுட்பப்பிரிவு மாணவர்களா நீங்கள்?
உங்கள் கனவுகளை நினைவாக்க எங்களுடன் இணையுங்கள்

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

077 170 3549



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.